மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் கூறிய விளக்கத்தை ஒட்டி, இதை விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒற்றி வைக்கத் தேவையில்லை என்று கருதி, இதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

(அ) கவன ஈர்ப்பு அறிக்கைகளுக்கு அறிக்கை அளிப்பதில் தாமதம்.

***திரு. கோ. பூவராகன்**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு 3-3-1969-ம் தேதியன்று கொடுக்கப்பட்டது. கவன ஈர்ப்புத் தீர்மானத்திலேயே 'மாட்டர் ஆஃப் அர்ஜெண்ட் பப்ளிக் இம்பார்டன்ஸ்' என்று கூறப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானம் இப்பொழுது சுமார் 20 நாட்களுக்குப் பிறகு சபை முன்பு வருகிறது. இன்றையதினம் பார்க்கிற பொழுது, இதனுடைய அவசரமும் போயவிட்டது, பொது முக்கியத்துவமும் போய்விட்டது என்பதை இந்த அரசுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். இதை நான் முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குத்தான் கொண்டு வந்தேன். அது கல்வி அமைச்சரின் கவனத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. இந்தச் சமயத்தில் அவர் பதிலை எதிர்பார்த்து, பிறகு நான் இதைக் கொண்டு வருகிறதா, இல்லையா என்று சொல்கிறேன் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர் தீர்மானத்தைப் படித்து விட்டு, 'அமைச்சர் அவர்களின் அறிக்கையை எதிர்பார்க்கிறேன்' என்று சொல்லிவிட்டு, அமைச்சர் அறிக்கை அளித்த பிறகு வேண்டுமானால் ஏதாவது விளக்கம் கேட்டுக்கொள்ளலாம் என்ற நிலைதான் இருக்கிறது. கவன ஈர்ப்புத் தீர்மானம் இத்தனை நாட்களுக்கு முன்பு கொடுத்தேன், இப்பொழுதுதான் வருகிறது" என்பது போன்ற பிரச்னைகளை இந்த அவையிலே எழுப்பக்கூடாது. பேரவைத் தலைவருடைய அறையிலே தான் எழுப்ப வேண்டும் என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்களுக்குத் தெரியும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, அதை அவர்கள் இங்கே எழுப்புவது முறையாகாது.

திரு. கோ. பூவராகன்: கனம் சபாநாயகர் அவர்களே, அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைத்தான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். அவசரமும், பொது முக்கியத்துவமும் எவ்வளவு நாட்களுக்குப் பிறகு இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு வருகிறது என்பது இதிலிருந்து புரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை இந்த அவையிலே எழுப்பக் கூடாது. இதைப் பற்றி ஏதாவது தெளிவு பெற வேண்டுமானால், அதை இந்த அவையிலே எழுப்பக்கூடாது. பேரவைத் தலைவருடைய அறையிலே தான் எழுப்ப வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கவன ஈர்ப்புத் தீர்மானம் என்று கூறி, அதை இந்த உறுப்பினர் கொண்டு வருகிறார்கள் என்று பேரவைத் தலைவர் பெயரை அறிவித்தவுடன், அப்படி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருகிற உறுப்பினர் அந்தத் தீர்மானத்தைப் படித்துவிட்டு உட்காருவதுதான் இந்த மன்றத்தில் முறையாக இருந்து வருகிறது. அதுதான் விதியாகவும் இருந்து வருகிறது. அப்படியில்லாமல் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஏன் இவ்வளவு தாமதமாக எடுத்துக்கொண்டீர்கள் என்றெல்லாம் இந்தச் சபையில் கேட்பது இதுவரையில், நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்த காலம் தொட்டு இருந்ததில்லை. இதை அமைச்சராக இருந்த திரு. பூவராகன் அவர்கள் நன்கு கவனித்திருப்பார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். கவன ஈர்ப்புத் தீர்மானம் என்று பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதும், அதைக் கொண்டு வந்த உறுப்பினர் அந்தத் தீர்மானத்தைப் படித்து

விட்டு உட்காருவதும், அதற்குப் பிறகு அமைச்சர் அதற்கான விளக்கத்தை அளிப்பதும், அதற்குப் பிறகு, புதிதாகச் சேர்க்கப்பட்ட விதிகளின்படி ஏதாவது விளக்கம் வேண்டுமென்றால், ஒன்றிரண்டு கேள்விகள் கேட்டு விளக்கத்தை அந்த உறுப்பினர் பெறலாம் என்ற அளவிலேதான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவரப்படுகிறது. கவன ஈர்ப்புத் தீர்மானம் ஏன் தாமதமாக எடுத்துக் கொள்ளப்பட்டது என்பது போன்ற பொது விஷயங்களெல்லாம் சபையின் நடவடிக்கைகளில் மானிய விவாதம் நடைபெறுகிற நேரத்தில் பேசப்பட வேண்டிய விஷயங்களாகும்.

(ஆ) விருத்தாசலம் அரசினர் கலைக்கல்லூரி மாணவர்களுக்கும் டோல்கேட் கண்ட்ராக்டருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு.

MR. SPEAKER : So, the hon. Member is not calling the attention of the Hon. Minister . . . .

THIRU G. BHUVARAHAN : Sir, I call the attention of the Hon. the Minister for Education and Industries to a matter of urgent public importance, namely, the clash between the tollgate contractor and the students of the Government Arts College, Virudhachalam which has resulted in serious injuries to a number of students and innocent public on 24th February 1969 as also the closure of the College up to 5th March 1969.

THIRU K. RAMAMOORTHY : Sir, I call the attention of the Hon. the Minister for Education and Industries to a matter of urgent public importance, namely, the clash between the tollgate contractor and the students of the Government Arts College, Virudhachalam which has resulted in serious injuries to a number of students and innocent public on 24th February 1969 as also the closure of the College upto 5th March 1969.

திரு. செஞ்சி வெ. முனுசாமி: தலைவர் அவர்களே, மன்ற உறுப்பினர் திரு. பூவராகன், அவசரமும், பொது முக்கியத்துவமும் போய்விட்டது என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, இதைக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொண்டு விளக்கம் அளிக்க வழி இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30 THIRU K. VINAYAKAM : The hon. Member is questioning your right Sir, in having admitted this statement.

திரு. செஞ்சி வெ. முனுசாமி அவசரம் போன பிறகு கவன ஈர்ப்புத் தீர்மானம் ஆகாது. மன்றத்தில் வைக்கக்கூடிய வகையில் அது ஆகாது. விதிக்குப் புறம்பாக ஆகாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தத் தீர்மானத்தைக் கொடுத்த நேரத்தில் அதற்கு அவசியம் இருந்தது. இப்பொழுது அறிக்கை வந்திருக்கிறது. அறிக்கை அரசாங்கம் கொடுக்கிறார்கள். அந்த அறிக்கையில் என்ன இருக்கிறது என்றெல்லாம் பார்க்க இப்பொழுது நேரம் இல்லை.

* **மாண்புமிகு திரு செ. மாதவன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிரச்சினையை எழுப்பியதால் விளக்கம் சொல்ல விரும்புகிறேன். அவற்றை இப்படிப்பட்ட தீர்மானங்கள் வந்தவுடன் தாங்கள் எங்களுக்கு அனுப்புகிறீர்கள். நாங்கள் அவற்றை சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி விவரங்களைப் பெறவேண்டியிருக்கிறது. கனம் உறுப்பினர் திரு. பூவராகன் அவர்களே சொன்னார்கள், 20 நாட்கள் ஆகும் என்று. வேகமாகப் பெற்றுத்தர வேண்டும் என்றால், அதைப் பாராட்டலாம். ஆனால், அதை